## உடல் ஊனமுற்றோர், மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் நலன் உள்ளிட்ட சமூக நலன்

### (இனம் - 26)

01. 73/74 ஆவது அரசியலமைப்பு சட்டத்திருத்தமானது பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு 29 இனங்களுக்கான அதிகாரங்களையும் பொறுப்புகளையும் ஒப்படைப்பது பற்றி தெரிவிக்கின்றது; அதில் இனம் 26 உடல் ஊனமுற்றோர் – மனநலங் குன்றியோர் நலம் உள்ளிட்ட சமூக நலன் குறித்துக் கருகின்றது.இந்த இனம் முடமானோர், அனாதை குழந்தைகள், தத்தெடுத்த குழந்தைகள் ஆகியோரின் நலன், முதியோர் நலன், வெறிமயக்க மருந்தூட்டல் தடுப்பு, பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு, இளங்குற்றவாளி நீதி நிருவாகம், மதிய உணவுத் திட்டம் மற்றும் சமூகக் கேடுகளுக்கு எதிராக விழிப்பூட்டல் ஆகியவற்றை உள்ளடக்குவதாகும்.

### ஊனமுற்றோர் மறுவாழ்வு

02 1991 ஆவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 11.13 இலக்கம் ஊனமுற்றோர் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஊனமுற்றோருக்காகச் சற்றொப்ப 217 சிறப்புப் பள்ளிகள் உள்ளன. அதில் 23 பள்ளிகள் – பார்வைபற்றவர்களுக்காக 11 பள்ளிகள், கேட்புத் திறனை இழந்தவர்களுக்காக 10, மனநலங் குன்றியோருக்கு 1, அங்ககோணல் சார்ந்த மிகவும் ஊனமுற்றோருக்கு 1 – அரசால் நடத்தப்பெறுகின்றன. மொத்தத்தில் இச்சிறப்புக் கல்வி வசதியை 8726 குழந்தைகள் பயன்படுத்திக் கொள்கின்றனர். மேலும், கேட்புத் திறனற்ற குழந்தைகளுக்காக 20 மாவட்டங்களில் 23 முன்பருவக் காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிறப்புப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்காகப் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பெறுகின்றன. உடல் ஊனமுற்றோர் சட்டப்படி நிறுவப்பெற்ற பயிற்சி மையங்கள் வாயிலாக சில தொழில்களில் பயிற்சி பெறுகின்றனர். பயிற்சி பெற்றவர்களுக்காக அரசு தொழில் நிறுவனங்களில், அரசுடைமை நிறுவனங்களில், தனியார் நிறுவனங்களில் தொழில் பழகுனராகப் பணிவாய்ப்பு அளிக்கப் பெறுகின்றது. முட்டுக்காட்டில் நவீனப் பயிற்சி மற்றும் உற்பத்திப் பட்டறையொன்று உள்ளது. இது மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், மடக்கும் குச்சிகள் மற்றும் ஏனைய பிற எஃகுப் பொருள்களை உற்பத்தி செய்கின்றது. அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் உடல் ஊனமுற்றவர்க்கு இலவசப் பயணச் சலுகை அளிக்கப்பெறுகின்றது. அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மிகவும் உடல் ஊனமுற்றவர்களில் 100 பேர்களின் தேவைக்காகச் செயற்கை உறுப்பு சார்பு நிலையமொன்று மதுரையில் அமைக்கப்பட்டுள்ளது. அது கல்வி, மருத்துவ அறுவை சிகிச்சை, இயற்பியல் சிகிச்சை மற்றும் உபகரணங்கள் போன்றவற்றை அளிக்கின்றது. செங்கல்பட்டில் உள்ள மாவட்ட மறுவாழ்வு நிலையம் இந்தியாவில் நிறுவப்பெற்ற 12 திட்டங்களில் ஒன்றாகும். உடல் ஊனமுற்றவர்களை அது கண்டறிந்தும் அவர்களின் தேவையை மதிப்பிட்டும் மறுவாழ்வு உதவி அளிக்கின்றது. மண்டல அரசு பார்வையற்றோர் அச்சகம் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்குத் தேவையான பார்வையற்றோர் கல்வி முறை சார்ந்த நூலை அச்சிட்டு வழங்குகின்றது. பார்வையற்ற பெண்கள் தங்குவதற்கென பூந்தமல்லியில் தங்கும் வசதியுடன் கூடிய அரசு மறுவாழ்வு இல்லத்தில் சுண்ண எழுதுகோல் துண்டுகள் செய்யவும், நெசவு நெய்யவும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அங்கு செய்யப்படும் உற்பத்திப் பொருள்கள் மருத்துவ மனைகளுக்கும், பள்ளிகளுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

03. மேலும், விரிவானதொரு போலியோ தடுப்பு மற்றும் போலியோவுக்குப் பலியானவர்களின் மறுவாழ்வு தொடர்பில் 1989 முதற்கொண்டு, வளர்ச்சிப் படிநிலை முறையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இப்போது 1995–96 வரை, வளர்ச்சிப் படிநிலையில், 310 வட்டாரங்கள் தெரிவு செய்யப்பட்டு, சற்றொப்ப 6,60,91 போலியோவிற்குப் பலியானவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. விரிவான மருத்துவ மதிப்பீடு முகாம்கள் இவ்வட்டாரங்களில் நடத்தப்பெற்றன. மருத்துவ உதவி, மருத்துவ அறுவை சிகிச்சை, இயற்பியல் சிகிச்சை, மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், உதவி உபகரணங்கள், ஊன்று கட்டைகள் போன்றவற்றை இலவசமாக வழங்குதல், இடைக்காலத்திற்குரிய பள்ளிகளிலும் சிறப்புப் பள்ளிகளிலும் சேர்த்தல், படிப்புதவித் தொகை அளித்தல், வாழ்க்கைத் தொழிற்கல்வி பயிற்சி அளித்தல் வேலையில் அமர்த்துதல்,

சுய வேலை வாய்ப்புக்கான வங்கிக் கடன் மற்றும் அரசு உதவி, அகவை முதிர்வு ஓய்வூதியம் ஒப்பளிப்புச் செய்தல் மற்றும் போலியோவுக்குப் பலியானோர் ஒவ்வொருவருக்கும் தேவையைப் பொருத்து பேணுகைப் படி ஒப்பளிப்புச் செய்தல் போன்ற பல்வேறு பயன்களைப் பெறுவதற்குப் போலியோவுக்குப் பலியானோர் மதிப்பீடு செய்யப்படுகின்றனர். நலவாழ்வுத் துறையானது போலியோ தடுப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகின்றது.

### சமூகப் பாதுகாப்பு:

04. இளஞ்சிறார் மற்றும் சீரற்ற குழுக்கள், ஆகியோருக்காக அரசால் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் திட்டங்களில் தடுப்பு, சரி செய்தல் மற்றும் மறுவாழ்வுச் சேவைகள் ஆகியன அடங்கப்பெறும். 1986 ஆம் ஆண்டின் இளஞ்சிறார் நீதிச் சட்டம், 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு)ச் சட்டம் ஆகியவற்றின் வழிவகையின் கீழ் கவனிப்பு, சிகிச்சை, பாதுகாப்பு, கல்வியியல் மற்றும் தொழில் பயிற்சி, மேற்கூறிய சட்டங்களின் வழிவகையின் கீழ் வருகின்ற குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் மறுவாழ்வு அளித்தல் போன்றவற்றை அளிப்பதற்காக தங்குமிடத்தோடு இணைந்த நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 11 கூர்நோக்கு இல்லங்கள், 10 இளஞ்சிறார் சிறப்பு இல்லங்கள், 6 பாதுகாப்பு விழிப்புப் பணி இல்லங்கள் மற்றும் 3 பிற்காப்பு நிறுவனங்கள், அரசாலும், 15 இல்லங்கள் தனியார் நிறுவனங்களாலும் நடத்தப் பெற்று வருகின்றன. இந்நிறுவனங்கள் கல்வியியல் பயிற்சியும் ஏனைய பிற வகைப் பயிற்சியையும் அளிக்கின்றன.

### பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு:

05. பெரும்பாலான மாநிலங்கள் பிச்சை எடுப்பு தடைச் சட்டத்தை நிறைவேற்றி உள்ளன. பிற மாநிலங்களில், நகராட்சி மற்றும் காவல்துறைச் சட்டங்களில் பிச்சை எடுத்தலுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளன. மறுவாழ்வு ஏற்பாடாகப் பிச்சை எடுப்பவர்கள் கண்டறியப்பட்டு, இந்திய அரசிடம் இருந்தும், மாநில அரசிடமிருந்தும் உதவி மானியம் பெற்று தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப் பெறுகின்ற பிச்சைக்காரர் இல்லங்களில் உள்ள பணி நிலையங்களில் தொழிற் பயிற்சிக்காகக் கொண்டு செல்லப்படுகின்றனர். இளஞ்சிறார் பிச்சையெடுப்பதனை ஒழிப்பதற்கான இத்திட்டம், குழந்தை காப்பகங்கள், முன்பருவப் பள்ளி மையம், முறைசாராக் கல்வி/எழுத்தறிவு இயக்கம், கல்வியியல் எழுத்தறிவு, கல்வியியல்/ தொழிலியல் பயிற்சி, அரசு சாரா அமைப்புகள் மூலமாக மனமகிழ் வசதிகள் போன்ற சேவைகளை அளிப்பதற்காக ஒப்பளிப்புச் செய்யப் பெற்றதாகும்.

### முதியோர் நலம்:

06. உயிருடனிருப்போர் அதிகரித்திருப்பதுடன் முதியவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கிணங்க 65 ஆண்டுகளும் அதற்கு மேலுமுள்ள முதியவர் மக்கள் தொகையானது 1981 மக்கள் தொகைக் கணக்குடன் ஒப்பிடுகையில் 6.51 விழுக்காட்டிற்கும் அதிகமாக 8.32 விழுக்காடாக உள்ளது. தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் இயக்கப்படும் முதியோர் இல்லங்கள் மூத்த குடிமக்களுக்குத் தங்குமிடங்களை அளிக்கின்றன. இப்போது, முதியோருக்குத் தங்குமிடம், உணவு அளித்தல், நலவாழ்வு கவனம் ஆகியவற்றை அளிப்பதற்காக 10 முதியோர் இல்லங்கள் இயங்கிவருகின்றன. பிழைப்பாதாரம் இல்லாத, உறவினர்கள் இல்லாத முதியோருக்கு முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1962இல் இருந்து ஓய்வூதியம் அளிக்கப் பெறுகிறது. முதியோர்களான இந்த ஓய்வூதியதாரர்கள் மதிய உணவு மையங்களில் மதிய உணவு பெறுகின்றனர்.

### குழந்தைகளைத் தத்தெடுத்தல்:

07. நீதிப் பேராணை விண்ணப்பம் (கு-1) 1171)/82 இல் உச்ச நீதிமன்றமளித்த கட்டளைகளையடுத்து, மாநில அளவிலான முகமையொன்று 1991 இல் அமைக்கப் பெற்றது. புள்ளிவிவரங்களைச் சேகரித்தல், நாட்டிடையே தத்தெடுக்கவேண்டி இந்திய அரசால் ஏற்பளிக்கப்பெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பத்தைச் செயல் முறைக்குள்ளாக்குதல், ஆய்வு மேற்கொள்ளுதல்,

நாட்டிடையே தத்தெடுத்துக் கொள்ள வேண்டி ஏற்பளிக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுத் தத்தெடுத்தலை ஏற்று நடத்தும் முகமைகள் ஆகியவற்றின் பட்டியலைக் காலத்துக்கு ஏற்ற புத்தம் புதிய நிலைக்குக் கொணர்தல். ஏற்பளிக்கப்பெற்ற நிறுவனங்களால் அனுப்பப்பெறுகின்ற முன்னேற்ற அறிக்கைகளை மறுஆய்வு செய்தல். ஏற்பளிக்கப்பட்ட அமைப்புகளால் பேணப்படுகின்ற ஆவணங்களைச் சரிபார்த்தல் மற்றும் மைய முகமையில் வேண்டக்கூடும் தகவலை வழங்குதல் போன்ற தத்தெடுப்பு தொடர்புடைய அனைத்துப் பொருண்மைகளுக்கும் பொறுப்புடையதாக இருக்கும்.

### அரசின் நிதியளிப்பு ஆதரவு

08. இத்திட்டங்களுக்காகக் கடந்த மூன்றாண்டுகளின்போது ஒதுக்கப்பட்ட நிதிகளின் விவரம் பின்வருமாறு

(ரூபாய் இலட்சத்தில்)

| | கணக்குத் தலைப்பு | 1994–95 உள்ளபடியானது | 1995–96 திருத்திய மதிப்பீடு | 1996–97 திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 1. | ஊனமுற்றோர் நலன் | 919.98 | 943.95 | 1014.15 |
| 2. | வயதான, ஏலாத மற்றும் ஆதரவற்றோர் நலன் | 413.91 | 467.65 | 498.76 |
| 3. | சீர்திருத்தப் பணிகள் | 542.74 | 649.32 | 721.68 |
| 4. | ஏனைய சமூகப் பாதுகாப்பு மற்றும் முதியோர் ஓய்வூதியதாரர்களின் நலன் | 5540.14 | 7428.60 | 7432.90 |

### பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள்

09. கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் பயிற்சி வசதிகளில் ஊனமுற்றோர் தங்களை தற்சார்புடைய வராகவும், பொருளாதாரத்தில் பிறரின் ஆதரவைப் பெறாமலும் ஆக்கிக்கொள்ள வேண்டி பயிற்சி வசதிகள் அளித்தல் போன்றவற்றை வலுப்படுத்துவதில் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. இச்சமுதாயம் அத்தகையத் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியது இன்றியமையாததெனவும், நிருவாக இயந்திரம் மாவட்ட ஊராட்சிக்குரிய தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை அளிக்க வேண்டுமெனவும் மாநிலத் திட்ட குழுவின் குழு பிரிவு கருதுகின்றது. இந்நோக்கங்களைக் கருத்திற்கொண்டு, பின்வரும் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் 3 படி நிலைஅமைப்புகளிடம் ஒப்படைக்க மாநிலத் திட்டக் குழுவின் குழு பிரிவு பரிந்துரைக்கின்றது.

## I. ஊராட்சி

| நடவடிக்கை | ஒப்படைப்புக்குரிய அதிகாரங்கள் |
|---|---|
| 1. ஊனமுற்றோர் நலன்<br>அ. ஊனங்களைத் தடுத்தல் மற்றும் விரைந்து கண்டுபிடித்தல் | அ) ஊனமுற்றோர்களின் தொகையைக் கணக்கெடுத்து ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்புதல் |
| | ஆ) நலவாழ்வு மற்றும் ஊனமுற்றோர் துறையின் செயற்பாடுகளை ஒருங்கிணைந்து முடமாவதைத் தடுக்கும் ஏற்பாடுகளில் உதவி செய்தல். |

| நடவடிக்கை | ஒப்படைப்புக்குரிய அதிகாரங்கள் |
|---|---|
| | இ) அரசு சாரா அமைப்புகளின் உதவியுடன் "அபாயமிக்க" மற்றும் "உயர் அபாயமிக்க" நேர்வுகளைக் கண்டறிந்து குறைகளை ஆண்டுக்கொரு முறை களைந்து குழந்தைகளுக்கும் தடைகாப்பு ஏற்பாடு செய்ய உதவுதல். |
| | ஈ) முடமாவதற்கான காரணங்களைப் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குதல் தடுப்பு மற்றும் ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் இதன் பொருட்டு அறிவிப்பு முறையான தகவலைப் பயன்படுத்திக் கொள்ளுதல் |
| ஆ. கல்வியியல் வசதிகள் | அ) பதினாறும் அதற்கும் மேற்பட்ட வயதுப் பிரிவில் உள்ள எழுத்தறிவற்ற ஊனமுற்ற குழந்தைகளுக்குச் செயலாக்க எழுத்தறிவு வழங்கிட உதவுதல், ஊரகப் பகுதிகளில் கிடைக்கக் கூடிய மனித ஆற்றலைக் கொண்டு ஏற்புடைய தொடர்பினை அவர்களுக்கு வழங்கிய பின்னர் முறைசாராக் கல்வி அளித்திட உதவுதல். |
| | ஆ) பாடப்புத்தகங்களையும், நோட்டு புத்தகங்களையும், சீருடைகளையும், உதவித் தொகையினையும், இலவசப் பேருந்து பயண அட்டை களையும் ஏனைய பிற பொருட்களையும் உரிய நேரத்தில் வழங்கிட ஆவண செய்தல். |
| | இ) காது கேளாதவர்களுக்காவும், மனநலங்குன்றிய மற்றும் இசிப்பு நோய்க்கு ஆட்பட்ட குழந்தைகளுக்காகச் சிறப்புப் பள்ளிகளையும் / நிறுவனங்களையும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அமைத்திட வேண்டி ஊக்கப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளல்; உரிய முறைப்படியான உள்கட்டமைப்பு வசதிகளைஅளித்திட உறுதிசெய்யும் வகையில் அத்தகைய பள்ளிகளை உருவாக்கிட அரசுக்கு உதவுதல். |
| | (ஈ) வாழ்க்கைத் தொழில் பயிற்சி வசதிகளுடன் ஊனமுற்ற குழந்தைகளுக்குரிய சிறப்புப் பள்ளிகள் கருவிகளைப் பெற முயற்சியெடுத்தல். |
| (இ) வேலைவாய்ப்பு வசதிகள் | (அ) அரசு சாரா அமைப்புகளின் உதவியுடன் பயிற்சி மற்றும் திறன் அளிப்புத் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்து பொருத்தமான வேலைகளை முடமானோர் பெறுவதற்கு உதவிசெய்தல். |
| | ஆ) சுய வேலைவாய்ப்பு முயற்சிகளில் உதவி செய்தல்; இம்முயற்சிகளுக்குக் கடன் பெறுவதற்காக முடமானோருக்கு உதவி செய்தல்; பெட்டிக் கடைகளையும் பிறகடைகளையும் பெறுவதற்கு அவர்களுக்கு உதவி செய்தல். |
| ஈ) பிறநல மற்றும் மறுவாழ்வு | அ) உதவியும் துணைக் கருவிகளும் தேவைப்படும் ஊனமுற்றோரைக் கண்டறிந்து உதவி செய்தல்; அதனைப் பகிர்ந்தளித்திடவும் உதவி செய்தல். |

| | நட வடிக்கை | ஒப்படைப்புக்குரிய அதிகாரங்கள் |
|---|---|---|
| | | (ஆ) மனநலங் குன்றியவர்களைப் பாதுகாத்து மறுவாழ்வு அளித்திட சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ளல். |
| | | (இ) சலுகை விலையில் முன்னுரிமை அடிப்படையில் வீட்டிற்கான நிலங்களை ஒதுக்கீடு செய்தலையும் தொழில் மையங்களையும் அமைப்பதற்கான உறுதி செய்தல். |
| | | (ஈ) அடையாள அட்டைகள் வழங்கிட உதவி செய்தல், இலவசப் பேருந்து அனுமதிச்சீட்டு மற்றும் ஏனைய பிற பணிகளைப் பெறுவதில் உதவிசெய்தல். |
| | | (உ) நலவாழ்வு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கையில் அரசு சாரா அமைப்புகளிடம் ஆதாரம் திரட்டுதல். |
| | | ஊ) விளையாட்டுப் போட்டிகளுக்கு ஏற்பாடு செய்து கிராம அளவில் விளையாட்டு நடவடிக்கைகளில் ஊனமுற்றோரை ஊக்கப்படுத்த ஏற்பாடு செய்தல். |
| 2. | முதியோர் நலவாழ்வு | அ) **60** ஆண்டுக்கு மேற்பட்டோரின் மக்கள் தொகையை எடுத்து வயதான ஊனமுற்றோரைக் கண்டறிந்து கிராம அளவில் ஆவணங்களைப் பேணுதல். |
| | | ஆ) வயதான மக்கள் முதியோர் ஓய்வுதியம் பெறவும் அரசால் வழங்கப் பெறுகின்ற இலவசப் பொருள்களைப் பெறவும் உதவுதல். |
| | | இ) முதியவர்களுக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சியளிக்க முயற்சிகளை மேற்கொண்டு சுய வேலைவாய்ப்பு முயற்சிகள் உள்ளிட்ட ஏற்றுக் கொள்ளத்தக்க செயற்பாட்டில் அவர்களை ஈடுபடச்செய்தல். |
| | | ஈ) அடையாள அட்டைகளை அவர்களுக்கு வழங்குதல். |
| | | உ) முதியோரை கவனித்துக் கொள்ளுதல் தொடர்பில் தகவலளிப்பு முறைகள் வாயிலாக மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்குதல். |
| | | ஊ) முதியோர்க்குப் பகல் நேரக் கவனிப்பு நிலையங்களை அமைத்திட உதவுதல். |
| 3. | வெறிமயக்க மருந்து, வெறிய நச்சுத்தன்மை ஆகியவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல். | அ) தகவல் அளிப்பு மற்றும் ஏனைய பிற தகவலளிப்பு முறைகள் வாயிலாக வெறிமயக்க மருந்து, வெறிய நச்சுத் தன்மை ஆகியவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதால் கேடு விளைவதைப் பற்றி மக்களிடையே மாணவர்களிடையே எடுத்துக் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்; இதற்காக அரசு சார்பற்ற நிறுவனங்களை ஈடுபடுத்துதல். |

| நடவடிக்கை | | ஒப்படைப்புக்குரிய அதிகாரங்கள் |
|---|---|---|
| | | ஆ) நோயினை விரைவாகக் கண்டறிதல், தடைபடுத்துதல் கல்வி மற்றும் தீய பழக்கத்திற்கு இனி ஆகாதவாறு சார்புடைய மறுவாழ்வு நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு உதவி செய்தல். |
| | | இ) அற்ப காரியங்களில் முனைந்து ஈடுபடுவதைத் தடுக்க நடவடிக்கையெடுத்தல். |
| | | ஈ) கெட்ட பழக்கத்திற்கு அடிமையாக்கும் மற்றும் மட்டுமிஞ்சிய குடிப்பழக்கத்திற்கு ஆட்பட்டவர்களின் சிகிச்சைக்கு நல்வாழ்வுப் பணியாளர்களை ஈடுபாடு கொள்ளச் செய்தல். |
| | | உ) வெறியூட்டும் மருந்து பற்றி சிக்கல்களைக் குழந்தைகளிடையே கையாள ஆசிரியர்களைத் தக்கவாறு அறிவுறுத்துதல் |
| | | ஊ) ஆண்களிடையே குடிப்பழக்கத்தை ஒழிப்பதில் கடமையாற்றுகிற மகளிர் அமைப்புகளுக்கும், ஊரகப் பெண்களுக்கும் உதவுதல். |
| | | எ) அரசு சாரா அமைப்புகளால் குடும்பக் கலந்தாய்வு மையங்களை அமைப்பதில் உதவி செய்தல் மற்றும் செயல் நோக்கமளித்தல் கலந்தாய்தல், சிகிச்சையளித்தல், தொடர் கவனிப்பு, தீய பழக்கத்திற்கு ஆளாகி நலம் பெற்றவர்களைச் சமூகத்தோடு மீண்டும் ஒருங் கிணைத்தல் ஆகியவற்றிற்கான திட்டங்களை தீட்டுதல். |
| 4. | பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு | அ) அனைத்து வயதுப் பிரிவிலும் உள்ள பிச்சைக் காரர்களைக் கண்டறிதல். |
| | | ஆ) பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கை களில் உதவி செய்தல். |
| | | இ) இளஞ்சிறார் பிச்சையெடுத்தலை ஒழிப்பது தொடர்புடைய சேவைகளை வழங்குவதில் உதவி செய்தல். |
| 5. | இளஞ்சிறார்களுக்கும் ஒழுக்கக் கேடு வாய்ந்த பெண்களுக்கும் | அ) இளஞ்சிறார் நல்வாழ்வு வாரியத்திற்கும், இளஞ்சிறார் நீதிமன்றத்திற்கும் வழக்குகளை மறுவாழ்வு அளித்தல். அனுப்பு வைக்க உதவுதல். |
| | | ஆ) குழந்தைகளுக்குக் கல்வி புகட்டவும் அவர்கள் குற்றம் செய்வதில் இருந்து தடுப்பதற்கும் அரசு சாரா அமைப்புகளுக்கு ஆதரவு திரட்டுதல். |
| | | இ) ஒழுக்கக் கேடு வாய்ந்த பெண்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கையிலும், விழிப்புணர்வினை உண்டு பண்ணுவதிலும் உதவி செய்தல்; அரசு சாராத அமைப்புகளின் ஆதரவைத் திரட்டுதல். |

## II. ஊராட்சி ஒன்றியம்

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| **1. ஊனமுற்றோர் நலன்** | |
| அ) தடுத்தல் மற்றும் இயலாமையை விரைந்து கண்டறிதல் | அ) நலிவுற்றோரின் புள்ளி விவரங்களை ஊராட்சிகளிடமிருந்து சேகரித்து, இயலாமை நிகழ்வுக்கான காரணங்கள் குறித்த அறிக்கைகள் மீது ஆய்வு செய்தல் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு அனுப்புதல். |
| | ஆ) இயலாமையைக் கண்டறிவதற்கான ஏற்பாடுகளில் ஊராட்சிக்கு உதவி செய்தல் மற்றும் நல வாழ்வு, ஊட்டச்சத்து மற்றும் ஊனமுற்றோர் நலவாழ்வுத் துறைகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்; மேற் பார்வையிடல் பணியினையும் ஏற்றல். |
| | இ) ஊராட்சியின் விழிப்புணர்வு உண்டு பண்ணும் ஏற்பாடுகளுக்கு உதவி செய்தல். |
| ஆ) கல்வி வசதிகள் | அ) சிறப்பு பள்ளிகளை நிறுவுவதில் கல்வி ஒருங்கிணைப்பு, முறைசாராக்கல்வி, தொழில் சார்ந்த பயிற்சி, உள்கட்டமைப்பு வசதிகள் போன்ற கல்வியியல் வசதிகளை வழங்குவதில் ஊராட்சியின் செயற்பாடுகளுக்கு இயலக்கூடிய அனைத்து உதவிகளையும் வழங்குதல், மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல். |
| | ஆ) ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம், அரசு சாரா அமைப்புகள் துறை அலுவலர்கள் ஆகியவற்றின் சார்பாளர்களுடன் காலமுறையில் கூட்டங்களை நடத்துதல்; குறைபாடுகளைக் கண்டறிந்து, சீர் செய்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |
| இ) வேலைவாய்ப்பு வசதிகள் | அ) பயிற்சியிலும் திறன் பயிற்சித் திட்டங்களிலும் உதவி செய்தல், அரசு சாராத அமைப்புகளின் ஆதரவினைத் திரட்டுதல், பொருத்தமுடைய வேலைவாய்ப்பினைப் பெற உதவிசெய்தல்; வேலைவாய்ப்பு நிறுவனங்களில் பதிவு செய்ய உதவி செய்தல். |
| | ஆ) சுய வேலைவாய்ப்பு முயற்சிகளில் உதவி செய்தல், கடன் வசதிகளைப் பெறுவதிலும் தொடர்புடையவராக இருத்தல். |
| | இ) வேலைவாய்ப்பு தொடர்புடைய **1995** ஆம் ஆண்டுச் சட்டத்தின் (சமவாய்ப்புகள் உரிமைகளைப் பாதுகாப்பதில் மற்றும் முழுமையாக பங்கு கொள்ளுதல்) ஊனமுற்றோருக்குரிய கூட்ட வகையுரையை நிறைவேற்றுவதில் கண்காணிப்புச் செய்தல். |
| | ஈ) தேர்ந்தெடுக்கப்பட்ட சார்பாளர்களுடனும் அலுவலர்களுடனும் வேலைவாய்ப்பு வசதிகளை வழங்குவதில் ஏற்படும் இடையூறுகளைக் கண்டறிய வேண்டி காலமுறையில் மறு ஆய்வுக் கூட்டங்களை நடத்துதல். |

| | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| ஈ) | நல்வாழ்வு மற்றும் மறுவாழ்வு அளித்தல் நடவடிக்கைகள் | அ) ஊனமுற்றோருக்கு உதவிகளையும் துணைக்கருவிகளையும் அளிப்பதனைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல். |
| | | ஆ) மனநலங்குன்றியோரின் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றுக்கான இடையீட்டைக் கண்டறிய ஊராட்சிக்கு உதவி செய்தல். |
| | | இ) முடமானோர் எளிதே செல்லுவதற்காக தடை நீக்கும் முயற்சிகளால் உதவி செய்தல். |
| | | ஈ) இயலாதோரின் நல்வாழ்வு மற்றும் மறுவாழ்வு ஏற்பாடுகள் தொடர்புடைய இயலாதோரின் (சம வாய்ப்புகள். உரிமைகள் மற்றும் முழுமையாகப் பங்கு' பெறுதல் ஆகியவற்றைப் பாதுகாத்தல்) சட்டம், **1995** – இல் சொல்லப்பட்ட சட்ட வகையுரைகளை நிறைவேற்றுவதை உறுதி செய்தல். |
| | | உ) வீட்டுக்கான, நிலங்களை சலுகை விலைகளில் முன்னுரிமையளித்து ஒதுக்கீடு செய்ய உதவுதல். |
| | | ஊ) ஊனமுற்றோருக்கு அடையாள அட்டைகள் வழங்குவதை உறுதி செய்தல்; அரசு வழங்கும் சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ள உதவி செய்தல். |
| | | எ) ஊராட்சி ஒன்றிய அளவில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல். |
| | | ஏ) மறுஆய்வுக் கூட்டங்களைக் காலமுறையாக நடத்தி அதில் காணும் முன்னேற்றங்களுக்கான பரிந்துரைகளை மாவட்ட ஊராட்சிக்கு அனுப்புதல். |
| 2. | மறுவாழ்வு மற்றும் சாலையோர குழந்தைகளின் நலன். | அ) கிராம நிலையில் இருந்து புள்ளிவிவரங்களைச் சேகரித்து ஊராட்சி ஒன்றிய அளவில் பதிவுரு ஒன்றினைப் பேணி அதனை மாவட்ட ஊராட்சிக்கு அனுப்புதல். |
| | | ஆ) ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருவருக்கும் இரவுப் பாதுகாப்பிடத்தையும் பகல் கவனிப்பு மையங்களையும் அமைத்து, சாலையோர வேலை செய்யும் குழந்தைகள் மறுவாழ்வுக்கு ஊராட்சி மேற்கொள்ளும் முயற்சிகளில் உதவி செய்தல். |
| 3. | முதியோர் நலன் | அ) ஊராட்சியிடமிருந்து முதியோர்களின் புள்ளி விவரங்களைத் திரட்டி அவற்றை மாவட்ட ஊராட்சிக்கு அனுப்புதல். |
| | | ஆ) ஓய்வூதியம் மற்றும் பிறவசதிகள். அடையாள அட்டைகள் மற்றும் தொழில் பயிற்சி ஆகியவற்றை முதியோர் பெறுவதில் ஊராட்சிக்கு உதவி செய்தல். |
| | | இ) முதியோர் இல்லங்களின் செயற்பாடுகளை மறுஆய்வு செய்தல். |

| | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 4. | வெறிமயக்க மருந்துகளையும் வெறிய விளைவுகளையும் | அ) வெறிமயக்க மருந்து மற்றும் வெறிய விளைவு ஆகியவற்றால் ஏற்படும் கொடுமைகளைப் பற்றி தடுத்தல். விழிப்புணர்வு உண்டு பண்ணுவதில் ஊராட்சிக்கு உதவி செய்தல். |
| | | ஆ) வெறிமயக்க மருந்தின் கெட்ட பழக்கத்திற்கு அடிமையானவர்களைக் கையாளுகின்ற நல்வாழ்வுப் பணியாளர்களுக்கு, வெறிமயக்க மருந்தின் கெட்ட பழக்கத்திற்கு அடிமைப்பட்ட குழந்தைகளுக்குக் கல்விபுகட்டும் ஆசிரியரை மேம்படுத்துவற்கு, வெறிமயக்க மருந்தால் கெட்ட பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்களுக்குக் கல்வி புகட்டுவதற்குரிய சமூகப் பணியாளர்களுக்கு/கல்விபுகட்டு கின்றவர்களுக்குப் பயிற்சி மாதிரிகளை மேம்படுத்துவதில் புத்துணர்ச்சித் திட்டங்களில் ஊராட்சிக்கு உதவி செய்தல். |
| | | இ) துறைகளிடையே குடிப்பழக்கத்தை ஒழிப்பதில் மகளிர் அமைப்புகளுக்கும் மகளிருக்கும் உதவி செய்தல். |
| | | ஈ) குடும்பக் கலந்தாய்வு நிலையங்களை உருவாக்குவதில் உதவி செய்தல். |
| 5. | இளஞ்சிறார்களுக்கும் ஒழுக்கக்கேடு வாய்ந்த பெண்களுக்கும் மறுவாழ்வு அளித்தல். | அ) இளஞ்சிறார்களை மனிதநேயத்துடன் காவல் பணியாளர்கள் அணுகுவதை உறுதி செய்தல். |
| | | ஆ) அரசு சார்பற்ற அமைப்புகள் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுதல், அவர்கள் குற்றம் இழைப்பதி லிருந்தும் தடுத்தல் ஆகியவற்றிற்கு ஆதரவு திரட்டுதல். |
| | | இ) கூர்நோக்கு இல்லங்கள், பாதுகாப்பு இல்லங்கள். விழிப்புப்பணி இல்லங்கள், இளஞ்சிறார் இல்லங்கள், மற்றும் பிற்காப்பு நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல்திறனை மேற்பார்வையிடுதல். |
| | | ஈ) சமூகநலப் பணியாளர்களின் உதவியுடன் அறநெறி போதனை மற்றும் சுய முன்னேற்ற வகுப்பு ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்தல். |
| | | உ) இளங்குற்றவாளிக்கு நீதிவழங்கும் நடை முறையில் ஈடுபட்டிருக்கும் அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றிற்குப் பயிற்சி அளிப்பதில் உதவி செய்தல். |
| | | ஊ) இளங்குற்றவாளிகள் தொடர்புடைய ஆண்டறிக் கைகள் மற்றும் புள்ளி விவரங்கள் ஆகியவற்றை தொகுப்பதில் உதவி செய்தல். அவற்றை மாவட்ட ஊராட்சிகளுக்கு அனுப்புதல். |

| நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| | எ) | சிறையிலிருந்து வெளிவந்தவர்களைப் பொது மக்களிடையே இயல்பான மனிதர்களைப் போன்றுநடத்த விழிப்புணர்வினை உருவாக்குதல். |
| | ஏ) | திட்டங்களைச் செயற்படுத்துவதில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிய வேண்டியும் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டியும் மறு ஆய்வுக் கூட்டங்களை காலமுறைபாக நடத்துதல். |

## III. மாவட்ட ஊராட்சி

| | நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|---|
| 1. | சமூக நலன், ஊனமுற்றோர் மறுவாழ்வு, மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை ஒட்டுமொத்தமாக மாவட்டத்தில் மேற்பார்வையிடல் | அ) | மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் பதிவான புள்ளி விவரம், ஊனமுற்றோர் சாலையோர வேலை செய்யும் குழந்தைகள், முதியோர், பிச்சைக்காரர்கள், வெறி மயக்க மருந்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சீரற்ற நடத்தையுடைய பெண்கள் போன்றோர் மீதான கணக்கெடுப்பு மற்றும் ஊராட்சி / ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து பெறப்படும் ஆய்வு அறிக்கைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஆய்வறிக்கை களைத் தயாரித்தல். |
| | | ஆ) | உள்ளூர் வள ஆதாரங்கள் மற்றும் துணை வரவு – செலவு ஆதரவு ஆகியவற்றை உயர்த்த ஊக்கப்படுத்துதல். |
| | | இ) | மறுஆய்வுக் கருத்தரங்களைக் காலமுறையாக நடத்துதல் மற்றும் தரமான சேவை செய்தமையை மதிப்பீடு செய்வதற்கான தக்கதொரு பட்டியலொன்றினைப் பேணுதல், திட்டமிட்ட நடவடிக்கைத் திட்டவரைவொன்றினைத் தயாரித்தல் மற்றம் தொடர் நடவடிக்கை எடுத்தல். |
| | | ஈ) | இடைவெளிகளைக் கண்டறிந்து அதனை நிறைவு செய்திட வேண்டி ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஏனைய பிறரின் ஒத்துழைப்பினைத் திரட்டுதல். |
| | | உ) | ஆதரவினையும், கருத்துக்களையும் வேண்ட, குறிப்பாகப் பணிகளைப் பயன்படுத்துவது மீது செயற்பாடுகளையும் சமூகத் தணிக்கைகளையும் தேர்ந்தெடுக்கப்பெற்ற பெண் சார்பாளர் களிடமிருந்து உதவியைப் பெறுதல். |
| 2. | மறுவாழ்வு மற்றும் ஊனமுற்றோர் நல்வாழ்வு | அ) | மாவட்ட நிலையில் புள்ளிவிவர அடித்தள ஊனமுற்றோர் நல்வாழ்வுமொன்றினை உருவாக் மேலாண்மைத் தகவல் அளிப்பு முறையொன்றினை மேம்படுத்துதல். |
| | | ஆ) | நல்வாழ்வு மீதான நிலைக்குழு வாயிலாகக் கல்வியியல் மற்றும் வேலை வாய்ப்பு, நல்வாழ்வு மற்றம் மறுவாழ்வு ஏற்பாடுகள், |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| | இயலாமையைத் தடைசெய்தல் மற்றும் விரைந்து கண்டுபிடித்தல், விழிப்புணர்வினை உண்டு பண்ணுதல் போன்றவை தொடர்பான அனைத்துத் திட்டங்களையும் செயற்திட்டங்களையும் கண் காணித்தல் மற்றும் மறுஆய்வு செய்தல். |
| | இ) செயற்திட்டங்களின் செயல்விளைகளையும், குறைபாடுகளையும், கண்டறிந்து அவற்றை மதிப்பீடு செய்து சரியான நடவடிக்கை யெடுக்கவேண்டி கருத்துரைத்தல். |
| | ஈ) மறுஆய்வுக் கூட்டங்களைக் காலமுறையாக நடத்துதல், மதிப்பீட்டு அறிக்கைகளை ஆராய்தல் மற்றும் இடையிட்ட தடைகளில் மாற்றங்களைச் செய்ய வேண்டி கருத்துரைத்தல். |
| | உ) ஊனமுற்றோருக்கு அளிக்கப்பட்ட சலுகை வசதிகளையும், நிறுவனங்களுக்கான உள் கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்திட வேண்டி அரசிற்குக் கருத்துரைத்தல். |
| | ஊ) பணியாளர்களுக்கும் சமூக நலப்பணியாளர் களுக்கும் தரப்பட்ட பயிற்சியினையும் அடிப்படைப் பயிற்சிகளையும் காலமுறையாக மறுஆய்வு செய்தல். மேம்படுத்துவதற்கான கருத்துக்கணிதல். |
| 3. மறுவாழ்வு மற்றும் சாலையோர வேலையிலிருக்கும் குழந்தைகளின் நலம் | அ) ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மாவட்ட அளவில் தகவலைத் திரட்டுவதன் வாயிலாக ஆதரவற்ற மற்றும் வேலையிலிருக்கும் குழந்தைகளின் சூழ்நிலையை பகுப்பாய்வு செய்தல். |
| | ஆ) மறுவாழ்வு நடவடிக்கைகளை கண்காணித்து மறுஆய்வு செய்தல், இரவுத் தங்குமிடங்களையும், பகல் கவனிப்பு நிலையங்களையும் உரியவாறு செயல் படுவதனை உறுதி செய்தல்; உள்கட்டமைப்பு வசதியளிப்பதனை உறுதி செய்தல். |
| | இ) மறுஆய்வுக் கூட்டங்களைக் காலமுறையாக நடத்தி, குறைபாடுகளைக் கண்டறிந்து ஏற்புடைய இடையீடுகளைப் போக்க கருத்துரைத்தல். |
| 4. முதியோர் நலம் | அ) முதியோர் மற்றும் வயதான ஆதரவற்றவர் போன்றோரின் விவரங்களை புள்ளிவிவா அடிப்படையில் உருவாக்குதல். |
| | ஆ) முதியோர் இல்லங்களின் செயற்பாடுகளைக் கண்காணித்து, மறுஆய்வு செய்து, மதிப்பீட்டு முன்னேற்றம் காண கருத்துரைத்தல். |
| | இ) முதியோர்களுக்குரிய ஒய்வூதியமும், துணிகளும் உரிய நேரத்தில் அளிக்கப் பெறுவதை உறுதிசெய்தல். |
| | ஈ) குறைபாடுகளைக் கண்டறியவும் சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மறு ஆய்வுக் கூட்டங்களைக் காலமுறையாக நடத்துதல். |

| | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 5. | வெறிமயக்க மருந்துகளையும் வெறிய விளைவுகளையும் தடுத்தல் | அ) வெறிமயக்க மருந்து காரணமாகக் கெட்ட பழக்கத்திற்கு அடிமையாகாதிருத்தல் மற்றும் வெறிய விளைவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் ஆகியவை தொடர்பில் உணர்வூட்டும் இயக்கங்களை நடத்த ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவி செய்தல். |
| | | ஆ) வெறிமயக்க மருந்துக்கு அடிமைப்பட்ட மற்றும் வெறிய விளைவுக்கு ஆட்பட்டவர் களுக்கான மறுவாழ்வு ஏற்பாடுகளில் ஊராட்சி ஒன்றிய நிலையில் கலந்துரையாடு வதையும், ஆதரவளிப்பதையும் கண் காணித்தல். |
| | | இ) வெறிமயக்க மருந்துப் பழக்கத்திலிருந்து விடுபட்டோர் நிலையங்களையும், பிற்காப்பு இல்லங்களையும் அமைப்பதில் உதவி செய்தல். |
| | | ஈ) வெறிய விளைவு மற்றும் வெறிமயக்க மருந்துகளுக்கு ஆட்பட்டோருக்குச் சிகிச்சை அளிப்பதில் மாவட்ட அளவில் மருத்துவ மனைகளை ஈடுபடச் செய்தல். |
| | | உ) வெறி மயக்க மருந்துகளைத் தவறாகப் பயன்படுத்துகின்றவர்கள் மற்றும் தவறிழைப்பவர்கள் ஆகியோரைக் காட்டிலும் வெறிமயக்க மருந்துகளுக்கு அதிகமாகப் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பாதுகாக்க நீதித் துறையையும் காவல் துறையையும் திற நுட்பப்படுத்துதல். |
| | | ஊ) வெறி மயக்க மருந்துகளில் முனைந்து ஈடுபடுவதைத் தடுக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல். |
| | | எ) வெறிமயக்க மருந்துகளை வாணிகம் செய்வதைத் தடைசெய்ய கண்காணிப்புக் குழுக்களை அமைத்தல் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளில் உதவி செய்தல். |
| | | ஏ) குடும்ப கலந்தாய்வு நிலையங்களை அமைப்பதில் உதவி செய்தல். |
| 6. | பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு | அ) பிச்சை எடுப்பதைத் தடைசெய்யும் சட்டக் கூறுகளை நிறைவேற்றுவதில் உதவி செய்தல். |
| | | ஆ) பிச்சைக்காரர்கள் மற்றும் இளஞ்சிறார் பிச்சைக்காரர்கள் ஆகியோருக்கான மறுவாழ்வு நடவடிக்கைகளைக் கண காணித்தல். |
| 7. | இளஞ்சிறார்களுக்கும் ஒழுக்கக் கேடு வாய்ந்த பெண்களுக்கும் மறுவாழ்வு அளித்தல் | அ) **1986**ஆம் ஆண்டு இளைஞர் நீதிச் ஒழுக்கக்கேடு வாய்ந்த சட்டத்தின் கூறுகளை ஊராட்சி நிலையிலும். மறுவாழ்வு அளித்தல் ஊராட்சி ஒன்றிய நிலையிலும் செயற் படுத்துவதைக் கண்காணித்தல். |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| | ஆ) இளைஞர்கள் மற்றும் ஒழுக்கக்கேடு வாய்ந்த பெண்கள் ஆகியோருக்கு மறுவாழ்வு அளித்தல் மற்றும் பிற்காப்புச் சேவைகள் தொடர்பான ஊராட்சி ஒன்றியச் செயற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் மறுஆய்வு செய்தல்.<br>இ) இளைஞர் நீதி நிருவாகத்தற்கான மானியத் தொகையைப் பெறுவதில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவிசெய்தல்.<br>ஈ) கல்வி, நல்வாழ்வு, சமூகம், ஒழுக்கஞ்சார்ந்த மற்றும் ஒழுக்கவியல் சார்ந்த கூறுகளை வலியுறுத்துகின்ற கல்வியியல் திட்டங்களை உறுதிப்படுத்துதல்.<br>உ) ஊராட்சி ஒன்றியத்துடன் மறுஆய்வுக் கூட்டங்களை காலமுறையாக நடத்தி, குறைபாடுகளைக் கண்டறிந்து சரியான செயற்பாடுகள் குறித்துக் கருத்துரைத்தல். |
| 8. பணியாளர் மேலாண்மையும் திட்டங்களைச் செயற்படுத்துதலும் | அ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள 7 இனங்கள் திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடர்புடைய அனைத்துத் திட்டங்களையும் செயற்படுத்த வேண்டி மாவட்ட ஊராட்சிகளிடம் அதிகாரம் வழங்கப்படுதல் வேண்டும். **(1994** ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திற்குத் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென இப்பரிந்துரைகள் குறிக்கின்றன.) அவ்வாறு திருத்தங்கள் மேற்கொள்ளும் வரை மறுஆய்வு மற்றும் கண்காணிப்பு அதிகாரங்களை மாவட்ட ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.<br>ஆ) மாவட்ட நிலையிலும் அதற்குக் கீழும் இத்திட்டங்களை நிறைவேற்றுகின்ற பணியாளர்கள் மாவட்ட ஊராட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வருவார்கள். |

**நிருவாக, நிதி மற்றும் சட்டச் சிக்கல்கள்**

10. ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான மாவட்ட அலுவலகப் பணியாளர்கள் நிறைவாகவும், முற்றிலும் உள்ளாட்சி அரசுக்குப் பொறுப்புடையவர்களாகவும் இருக்க வேண்டுமென மாநிலத் திட்டக்குழுவின் குழு பிரிவு கருதுகின்றது. மாவட்ட நிலையில் உள்ள பணியாளர்கள் முழுநேர பணியாளர்களாக இருக்கின்ற வரையில், நிருவாக முறையில், இந்த மக்களாட்சி அமைப்புகளுக்கு அவர்களைப் பொறுப்புடைய வர்களாக்க மாவட்ட ஊராட்சிகளுக்கு அதிகாரங்களை ஒப்படைப்புச் செய்தல் வேண்டும்.

11. பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு மறுஆய்வு மற்றும் மேற்பார்வையிடல் செய்கடமைகளில் அதிகாரமளிக்க மாநிலத்திட்டக்குழு பிரிவு பரிந்துரைக்கின்றது. பெண்கள், குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோர் ஆகியோரின் நலன்களுக்காகப் பல்வேறு திட்டங்களைச் சமூக நலத்துறை நிறைவேற்றுகின்றது. மாவட்ட அளவில், ஊனமடைந்தோர் மறுவாழ்வுக்கு மாவட்ட சமூக நல அலுவலரும், மாவட்ட அலுவலரும் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பொறுப்புடையவர்களாவர். அவர்கள் மாவட்ட ஊராட்சிகளில் நடைபெறும் மறு ஆய்வு கூட்டங்களில் பங்கேற்க வேண்டும். அதனைப் போன்று, மாவட்ட நிலைக்குக் கீழ்நிலையில் உள்ள சமூகநலத் துறை அலுவலர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் / ஊராட்சியின் பரிந்துரைகள் மீதான தொடர் நடவடிக்கைகளை

மேற்கொள்ளுதல் வேண்டும். குழந்தைப்பருவத்தில் ஊனமடைவதை அளவீடு ஒன்றின் மூலம் கண்டுபிடிப்பது குழந்தைகள் மையப் (அங்கன்வாடி) பணியாளர்களின் கடமைகளில் ஒன்றாகும். குழந்தைகள் மையப் பணியாளரின் இச்செய்கடமையை குழந்தைகள் மையப் பணியாளர்கள் ஊராட்சிக்குப் பொறுப்புடையவர்களாக இருக்க வேண்டுவதை ஊராட்சி உறுதிசெய்தல் வேண்டும்.

12. சமூக நலத்தின் கீழ் வட்டாரம் ஒன்றுக்கு முக்கியசேவிகா ஒருவரும் கிராமசேவிகா இருவரும் உள்ளனர். சமூக நல இயக்ககம் பிரிக்கப்படுவதற்கு முன்னர் ஊனமுற்றோர் மறுவாழ்வு தொடர்புடைய வேலையை இவர்கள் கவனித்து வந்தனர். இப்போது, மகளிர் நலம், குழந்தைகள் நலம் தொடர்புடைய செயற்பாடுகளை மட்டுமே இவர்கள் நிறைவேற்றுகின்றனர். ஊனமுற்றோர் மறுவாழ்வுகளான செயற்பாடுகளை முக்கியசேவிகாவும், கிராமசேவிகாவும் நிறைவேற்றுவதனை ஊராட்சி ஒன்றியம் உறுதிசெய்தல் வேண்டும்.

13. மாவட்ட மறுவாழ்வு அலுவலங்கள் வாயிலாக ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான திட்டங்கள் செயற்படுத்தப்படுவதனை மாவட்ட ஊராட்சிகள் மறுஆய்வு செய்து கண்காணித்தல் வேண்டும். மாவட்ட அளவில் உள்ள முடமானோருக்கான பல்வேறு சிறப்புப் பள்ளிகளின் இயக்கம் மற்றும் பேணுகை ஆகியவற்றையும் மாவட்ட ஊராட்சிகள் மறுஆய்வு செய்யலாம்.

14. அனைத்து மாநில / பொதுப் பணிகளிலும், அரசு, உள்ளாட்சி அமைப்புகள் போன்ற அனைத்து வகைப்பட்ட கல்வியியல் நிறுவனங்களிலும் மற்றும் கருவிகள் மற்றும் துணைக் கருவிகள் ஆகியவற்றிற்கான பயனாளர்களைத் தெரிவு செய்வதிலும் ஊனமுற்றோருக்காக 3 விழுக்காடு காலியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுவதை இந்த மாவட்டக்குழு கண்காணிக்கும். இம்மாவட்டக்குழு கல்வி, வேலைவாய்ப்பு, கடன் ஒப்பளிப்பு, மறுவாழ்வு போன்றவற்றிற்குத் தொடர்புடைய பல்வேறு துறைகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்வதில் முக்கிய பங்கு ஆற்றுகின்றது. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி போன்ற பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் ஒவ்வொரு நிலையிலும் அறிவுரைஞர் குழு அமைக்கப்பெறலாம். 1995ஆம் ஆண்டு முடமானவர்கள் (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுமையாகப் பங்கேற்றல்) சட்டத்தில், உள்ள கூறுகள் செயற்படுத்தப்படுவதையும் இது உறுதிசெய்து கொள்ளல் வேண்டும்.

15. இல்லங்களின் செயற்பாடுகளையும், இல்லப் பணியாளர்கள், இளைஞர் நல வாரியம் மற்றும் இளைஞர் வழிகாட்டுக் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் மறுஆய்வுக் கூட்டங்களையும் இம்மாவட்ட ஊராட்சி கண்காணிக்கும். கல்வி, தொழிற்பயிற்சி, வேலைவாய்ப்பு, ஊட்டச்சத்து மற்றும் இளைஞர்கள். ஒழுக்கக்கேடு வாய்ந்த பெண்கள், சாலையோர வேலை செய்யும் குழந்தைகள், பிச்சைக்காரர்கள் மற்றும் இல்லத்திலிருந்து விடுவிக்கப் பெற்றவர்கள் ஆகியோரின் மறுவாழ்வுச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு துறைகளுடன் இம்மாவட்ட ஊராட்சிகள் தொடர்பினை அளிக்க வேண்டும்.